REGISTERED AS A CATHOLIC WEEKLY. P.197

# பாதுகாவலன்

PATHUKAVALAN

இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க வாரஏடு

மலர் 124 இதழ் 9 விலை ரூபா 5 30 ஆனி 1999

**அருள்வாக்கு**

நீங்கள் கடவுளால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள், அவரது அன்பிற்குரிய இறைமக்கள்.

ITY OF JA NA LIBRARY 17 AUG 1999 PERIODICALS DIVISION

புனித மாட்டீனார் குருமடத்தில் . . .

# தேவ அழைத்தல் பாசறை

"உங்கள் முன்னே பல துறைகள் இருக்கின்றன. அதில் எதனை நீங்கள் தெரிவு செய்வது என்பதைத் தீர்மானிக்க இறைவனை நோக்கிச் செபியுங்கள். இறைவன் உங்களைத் தன் பணிக்கென அழைக்கின்றார். அதனை உள்ளத்தில் உணர்ந்து கொள்ளுங்கள். அதேவேளை எமது மறைமாவட்டத்தில் தேவ அழைத்தல் பெருகவும் மன்றாடுங்கள்."

புனித மாட்டீனார் குருமடத்தில், கடந்த யூன் 25, 26,27ஆம் திகதிகளில் நடந்த தேவ அழைத்தல் பாசறையில் யாழ் மறைமாவட்ட ஆயர் அதி. வண. தோமஸ் சவுந்தரநாயகம் அவர்கள் இவ்வாறு கூறினார்.

யாழ்ப்பாணத்திலுள்ள பங்குகளிலிருந்து நூறு மாணவர்கள் இதில் கலந்துகொண்டார்கள். "உன் பணிக்கு நான் இதோ" எனும் குருமட விருது வாக்கியம் பின்னணியில் அசைந்தாட, யாழ் ஆயர் பாப்பரசரின் கொடியையும், குருமுதல்வர் குருமடக் கொடியையும் ஏற்றிவைத்ததுடன் நிகழ்வு மாலை 6.30 மணிக்கு ஆரம்பமானது.

மங்கள விளக்கை யாழ். ஆயரும், குருமுதல்வரும், குருமட அதிபரும், வருகைதந்த மாணவர் சார்பாக ஒருவரும் ஏற்றிவைத்தனர். குருமட அதிபர் தமது வரவேற்புரையில், "நீங்கள் உங்கள் உள்ளத்தில் தேவ அழைத்தலை உணர்ந்ததால் தான் இங்கு வந்திருக்கிறீர்கள். எதிர்காலத்தில் இவ்வழைத்தலைப் பழுதின்றிக் காத்து நல்ல இறைபணியாளர்களாகத் திகழ வேண்டும் "எனக் குறிப்பிட்டார். குருமுதல்வர் தமது ஆசியுரையில், "ஆயர் அவர்கள் இம்மாதிரியான நிகழ்வொன்று நடப்பதில் மிகவும் ஆர்வம் காட்டி ஊக்குவித்தார். இதன்மூலம் எம் மண்ணில் இறையழைத்தல் பெருக. இறைவனை மன்றாடுங்கள்," எனக் கூறினார்.

ஆயர் தமதுரையில் இன்றைய காலகட்டத்தில் மேலும் அதிக குருக்கள் உருவாக வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார். அவர் மேலும் பேசுகையில், "இன்று பல நாடுகளில் குருக்களின் எண்ணிக்கை குறைவாகவேயுள்ளது. உதாரணமாக பிரேசில் நாட்டில் 20, 000 கத்தோலிக்கருக்கு ஒரு குரு என்ற வீதத்திலேயே குருக்களின் எண்ணிக்கை காணப்படுகின்றது. பிரேசிலே இன்று உலகில் அதிக எண்ணிக்கையான கத்தோலிக்கரைக் கொண்ட நாடு என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே, நீங்களும் சிந்திக்க வேண்டியுள்ளது. இன்று நீங்கள் பல வீதிகள் இணையும் ஒரு சந்தியில் நிற்கிறீர்கள். ஒவ்வொரு வீதியும் பல்வேறு தொழில் துறைகளைக் குறிக்கின்றன. ஆசிரியர், வைத்தியர், வர்த்தகர், பொறியியலாளர் இன்னும் எவ்வளவோ (தொடர்ச்சி 3ஆம் பக்கம்)

## எமது ஆயுள் வேகமாக குறைந்து போகும் அபாயம் ஏற்பட்டுள்ளது

– யாழ் குடாநாட்டு மீனவர்களின் பிரதிநிதிகள்

இம் மாதம் 25ம் திகதி மனித முன்னேற்ற நடு நிலையத்தினரால் யாழ் குடாநாட்டு மீனவர்களுக்கான முதலாவது ஒன்றுகூடல் புனித சின்னப்பர் விடுதியில் இடம்பெற்றது. இதில் குடாநாட்டில் அனைத்து பகுதியிலிருந்தும் மீனவ சங்கங்களின் பிரதிநிதிகள் 45 பேர் கலந்து கொண்டனர். அந்நிகழ்வில் "கடல் வலயத் தடையால் எம்மிடமுள்ள மீன்பிடி இயந்திர சாதனங்களை பயன்படுத்தி தொழில் செய்ய முடியாதுள்ளது. வள்ளங்களில் வலித்து தொழில் செய்ய செல்கிறோம். இதனால் எம்மவரின் உடல்நிலை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. இப்படியே போனால் எமது ஆயுள் குறைந்துவிடும் என்று அஞ்சுகிறோம்" என்று மீனவர் சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

மேலும் நடைபெற்ற கூட்டத்தில் அவர்கள் தமது உள்ளக் குமுறல்களைத் தெரிவிக்கையில் "நீங்கள் இந்த கடல் வலயச் சட்டத்தை நீக்கி எங்களை சுதந்திரமாக தொழில் செய்வதற்கு வழி வகுத்தீர்கள் என்றாலே போதும். வேறு ஒரு உதவியும் எமக்கு செய்யத் தேவையில்லை." என ஆதங்கத்துடன் கேட்டுக் கொண்டனர்.

இக்கூட்டத்தில் மனித முன்னேற்ற நடுநிலைய இயக்குனர் அருட்திரு ஜெயக்குமார், கடல் தொழில் வள இயக்குனர் திரு. அல்பிரட் ஜோசப், கெயர் நிறுவனப் பிரதிநிதி திரு அந்தோனிப்பிள்ளை ஆகியோரும் கலந்து கொண்டு உரையாற்றினர்.

இனிவரும் காலங்களில் இக்கூட்டம் 3 மாதத்திற்கு ஒரு முறை இடம்பெற ஏற்பாடாகியுள்ளது. (N-02)

## கத்தோலிக்க பிரசுரங்களுக்கான அனுமதி

கத்தோலிக்க மறைக்கோட்பாடுகளையும் படிப்பினைகளையும் பாதுகாப்பது திருச்சபையின் முக்கிய கடமையாகும். எனவே கத்தோலிக்க பிரசுரங்களை வெளியிடும்போது தகுந்த ஆலோசனையும், அனுமதியும் பெற்றிருக்க வேண்டும். துண்டுப் பிரசுரங்கள், கைப்பிரதிகள், செபப் புத்தகங்கள், பாடல்கள், ஒலி, ஒளிப்பதிவு நாடாக்கள் ஆகியவற்றை வெளியிட விரும்பும்போது ஆயரின் அல்லது அவரால் நியமனம் பெற்றவரின் "NIHIL – OBSTAT" அனுமதியைப் பெற்றிருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி நிற்கின்றோம்.

யாழ் ஆயர்.

## ஆலயப் புகலிட மறுப்புக்கு அனைவரும் குரல் கொடுப்போம்

*– அருள் கலாநிதி எஸ். ஜே. இம்மானுவேல்*

வெளிநாடுகளில் ஆலயப்புகலிடம் அபலைகளாக அலைபவர்களுக்கும் அகதிகளுக்கும் கொடுக்கப்படுவது வழமையாக உள்ளது. ஆனால் சொந்த மண்ணில் பாதுகாப்புத் தேடி மடுத்திருப்பதியில் தஞ்சம் புகுந்த மக்களுக்கு ஆலயப் புகலிடம் மறுக்கப்பட்டுள்ளதும் மடுத்திருப்பதியில் இராணுவத்தினர் நிலைகொண்டிருப்பதும் தமிழர் வரலாற்றில் இடம்பெற்ற மிகச் சோகமான நிகழ்வு எனவும் . இதற்கெதிராக நாம் அனைவரும் குரல்கொடுப்பது வரலாற்றுக் கடமை எனவும் 15.05.99ல் பெனு பெல்ஜியத்தில் இடம்பெற்ற ஈழத்தமிழருக்கான உண்ணாவிரத யாத்திரைத்திருப்பலி மறையுரையில் அருள்கலாநிதி எஸ். ஜே. இம்மானுவேல் அடிகளார் குறிப்பிட்டார்.

இவ் யாத்திரை விசேடவிதமாக மடுத்திருப்பதியில் நிலைகொண்டிருக்கும் இராணுவம் வெளியேற மன்னார் ஆயர் குருக்கள் பொதுநிலையினர் நடாத்தும் உண்ணாவிரத வழிபாடுகளுக்கு எமது தோழமையையும் ஒருமைப்பாட்டையும் தெரிவிக்கும் முகமாகவும், திருத்தந்தையின் நீதிக்கும் சமாதானத்துக்குமான ஆணையத்திற்கு எமது உளக் குமுறல்களை அறிவிக்கும் பொருட்டும் கையொப்பம் திரட்டப்பட்டது.

*நன்றி : தொடுவானம்*

## இனிய இயற்கைச் சூழலில் இளைஞர் ஒன்றுகூடல்

நல்லூர் ஆசீர்வாதப்பர் ஆலய இளைஞர் ஒன்றியத்தின் வருடாந்த ஒன்றுகூடல் 05.06.99 சனிக்கிழமையன்று யாழ் பல்கலைக்கழக நல்லாயன் நிலையத்தின் அமைதியான சூழலில் நடைபெற்றது.

பங்குத்தந்தை அருட்திரு மத்தாயஸ் அடிகளின் வழிநடத்துதலின் கீழ் செப வழிபாட்டுடன் அன்றைய நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின. அருட்தந்தை சாள்ஸ் கொலின் கருத்துரை வழங்கி விளையாட்டுநிகழ்வுகளையும் நெறிப்படுத்தினார். பிற்பகலில் "சிறகுகள்" என்ற வீடியோப் படம் காண்பிக்கப்பட்டு அது பற்றிய விமர்சனமும் இடம் பெற்றது.


(தொடர்ச்சி 3ஆம் பக்கம்)

## பண்டாரவளை புனித அந்தோனியார் ஆலயப் பெருவிழா

பண்டாரவளையில் அமைந்துள்ள புனித அந்தோனியார் ஆலயத்தின் பாதுகாவலர் திருவிழா 27.06.99 ஞாயிற்றுக் கிழமையன்று நடைபெற்றது. காலை 9.30 மணிக்கு பதுளை ஆயர் பேரருட்திரு வின்ஸ்டன் பெர்னாண்டோ அவர்களின் தலைமையில் திருநாட்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

விழாவுக்கு ஆயத்தமாக 18ம் திகதியிலிருந்து நவநாள் வழிபாடுகளும், 26ம் திகதி மாலை 5 மணிக்கு நற்கருணை ஆராதனையும் இடம்பெற்றன.

## வாழ்த்துகிறோம் !



03-07-1999 தமது பெயர் கொண்ட திருநாளைக் கொண்டாடும் யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களுக்கு காவலனின் இதயம் நிறைந்த திருநாள் வாழ்த்துக்கள்!

## மடு அன்னையின் வருடாந்தத் திருவிழா அடக்கமாக நடைபெறும்

இவ்வாண்டு புனித மடு அன்னையின் வருடாந்தப் பெருவிழா ஆடி மாதம் 2 ஆம் திகதியன்று அடக்கமான முறையில் கொண்டாடப்படுமென்று மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்திரு சேவியர் குரூஸ் அடிகள் தெரிவித்துள்ளார்.

வழக்கமாக இந்த வருடாந்த உற்சவத்தில் பல்லாயிரக்கணக்கானோர் பங்குபற்றுவது யாவருமறிந்ததே. ஆனால் இம்முறை யாத்திரிகரின் அடிப்படைத் தேவைகளைக் கூட பூர்த்தி செய்ய இயலாதிருக்கிறதென குருமுதல்வர் அறிவித்துள்ளார்.

பெருவிழாவுக்குரிய நவநாட்கள் ஆரம்பித்தபோது அங்கு 500பேர் மட்டுமே இருந்ததாக அறியப்படுகின்றது. ஆயினும் விழா நாளன்று இன்னும் பெருந்தொகையானோரின் வரவு எதிர்பார்க்கப்படுகிறது. சில அரசியல் தலைவர்களும் விழாவில் கலந்து கொள்ளக்கூடும் என நம்பப்படுவதால், இத் தலைவர்களின் மெய்ப்பாதுகாவலரும், ஒழுங்கு பேணும் பொலிசாரும் ஆயுதம் தரிக்காது பணியாற்ற வேண்டுமென்று மன்னார் ஆயர் கேட்டுள்ளார்.

**ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில் காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும் (தி. பா. 127. 1)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம் கருத்து

### மடுத்திருப்பதியின் புனிதம் பேணப்படவேண்டும்

இலங்கையின் கத்தோலிக்க யாத்திரை தலங்களுள் தலைசிறந்த திருத்தலமான மருதமடு செபமாலை மாதாவின் வருடாந்தப் பெருவிழா இம்முறை கொண்டாடப்படுமென அறிவிக்கப்பட்டது மடு அன்னையின் பக்தர்கள் அனைவர்க்கும் ஆறுதல்தரும் செய்தியே. இலங்கை வாழ் மக்கள் இன, மத பேதமின்றி பல்லாயிரக்கணக்கில் திரண்டு வந்து அன்னைக்கு மகிமை செலுத்தும் திருத்தலமாக இது நீண்டகாலமாக விளங்கி வந்தது. ஆனால் அண்மைக் காலங்களில் நாட்டின் சீர் குலைவால் மக்களுக்கெல்லாம் அருளின் ஊற்றாக இருந்த மடுயாத்திரை பெரும்பாலானோர்க்கு கிட்டாத ஒன்றாக ஆகிவிட்டமை கவலைக்குரியதொன்றாகும்.

இத்திருத்தலத்தில் கால் பதிக்கும்போதே அது ஒரு புனிதபூமி என்ற உணர்வு ஏற்படும். ஆலயம் அமைந்துள்ள அமைதியான, ஏகாந்தமான இயற்கைச் சூழலும், அங்கு தொடர்ந்து பேணப்படும் செபதபச் சூழ்நிலையும் இந்த உணர்வை ஏற்படுத்துகின்றன. இவற்றைக் கெடாமல் பாதுகாப்பதற்கு ஆலயத்தின் கட்டுப்பாடுகள் உதவுகின்றன. மடுப்பதி ஏனைய ஆலயங்களைப் போன்றதல்ல. பிற இடங்களில் நிகழும் கூட்டங்கள், கலை நிகழ்ச்சிகள், வியாபாரம், விளையாட்டு, ஆரவாரங்கள் ஒன்றுமே இங்கு இடம் பெறுவதில்லை. இத் திருத்தலத்தின் புனிதத்துவத்தின் இரகசியம் இது தான்.

இவ்வாறு ஒரு புண்ணிய பூங்காவனமாக விளங்கிய அன்னையின் திருத்தலத்தின் அமைதியும், செபச்சூழலும் அண்மைக் காலத்து நாட்டின் நிகழ்வுகளால் கெடக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகியது. போரினால் ஏற்பட்ட பாரிய இடம் பெயர்வுகளின் காரணமாக பெருந்தொகையான மக்கள் அகதிகளாக வந்து மடுவில் தஞ்சம் புகுந்தனர். ஆதியில் மதத்தின் பெயரால் நிகழ்ந்த வன்முறையிலிருந்து தப்பிவந்த அகதிகளுக்கு ஓர் இருப்பிடத்தைக் காட்டிய மரியன்னை இன்று இனத்தின் பெயரால் வன்முறைக்குட்பட்ட மக்களுக்குஅடைக்கலமானாள்

ஆயினும் அகதிகள் வரவால் ஏற்பட்ட நெருக்கடியின் மத்தியில் திருத்தலத்தின் செபச்சூழலைப் பேணுவதில் உள்ள சிரமம் சொல்லாமலே விளங்கும்.

இதற்கிடையில் இராணுவ ஆக்கிரமிப்பு மேலும் ஒரு பிரச்சனையை கொண்டு வந்தது. ஆயுதம் தரித்தவர்கள் அங்கு நடமாடுவதாலும், தலத்தின் புனிதத்துவத்தைப் பாதிக்கும் செயல்களில் ஈடுபடுவதாலும் தலத்தின் நடுநிலைமையும், அமைதியும் கெடக்கூடிய ஆபத்து ஏற்பட்டுள்ளது. இதனை எதிர்த்து திருச்சபை அதிகாரிகளும், மக்களும் கண்டனக்குரல் எழுப்பியுள்ளனர்.

எவ்வாறாயினும் மடுத்திருப்பதியின் புனிதத்துவம் பேணப்படுவது அவசியமாகும். அத்துடன் தேவதாயின் அருளை வேண்டிவரும் யாத்திரீகர்கள் தடையின்றி பிரயாணம் செய்யவும், எவ்வித இடையூறுமின்றி தமது வணக்கங்களைச் செலுத்தவும் பாதுகாப்பான சூழல் அமைக்கப்பட வேண்டும்.

# கவனத்தை ஈர்த்துள்ள மடுத்திருப்பதி

கானகத்தின் நடுவே கோயில் கொண்டருளி அடைக்கலம் தேடி வருவோர்க்கு அபயம் அளித்து இறைவனின் அருள் சுரந்து வழிந்தோடும் ஒரு நீரூற்றாய் விளங்கும் மருதமடு மாதாவின் வருடாந்த உற்சவம் மிக எளிய முறையில் இம்முறை கொண்டாடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இலட்சம் மக்கள் திரண்டுவந்து அன்னையை மகிமைப்படுத்தும் இத்திருத்தலத்தில் 500 பேருடன் விழாக் காலம் ஆரம்பித்துள்ளதென்றால் அது நாட்டு நிலைமையின் ஒரு பிரதிபலிப்பே ஆகும்.

மருதமடு செபமாலை அன்னை ஆலயம் பழமையும் வரலாற்றுச் சிறப்பும் வாய்ந்த திருத்தலமாகும். இலங்கை வாழ் கத்தோலிக்க மக்கள் அனைவருக்கும் பரிசுத்தமான யாத்திரைத் தலமாக விளங்குவது மட்டுமன்றி, இன மத பேதமின்றி தன்னை நாடிவரும் அனைவருக்கும் ஆறுதலும் ஆனந்தமும் அளித்துவரும் அன்னையின் திருக்கோயிலாகவும் இருக்கின்றது.

இத்தலத்தின் வரலாற்றையறிய நாம் போர்த்துக்கேயர் காலத்திற்குப் பின் நோக்கிச் செல்லவேண்டும். அக்காலத்தில் இந்தியாவிலிருந்து வந்த மறை போதகரின் தொடர்பினால் மன்னார்ப் பகுதியில் பெருந்தொகையான மக்கள் கிறிஸ்தவ மறையைத் தழுவினார்கள். அங்கு கிறிஸ்தவர்களின் வழிபாட்டுக்காக அமைக்கப்பட்டிருந்த 26 கோயில்களுள் மன்னாரிலிருந்து 6 மைல் தொலைவிலுள்ள மாந்தையில் இருந்த ஆரோக்கியமாதா கோயிலும் ஒன்றாகும். இம்மாந்தை ஆலயம்தான் செபமாலை மாதாவென்று பின்னாளில் அறியப்பட்ட மடுமாதா சுரூபத்தின் ஆதி இருப்பிடமாக இருந்தது.

## வேத கலாபனை

ஒல்லாந்தருடைய ஆட்சியில் நிகழ்ந்த கொடூரமான வேத கலாபனையின் போது கத்தோலிக்கர் கொல்லப்பட்டு ஆலயங்களும் அழிக்கப்பட்டன. குருக்களின் துணையில்லாத அவ்வேளையில் தமது உயிரையும், மாதாவின் திருச்சுரூபத்தையும் காக்கும் பொருட்டு 20 குடும்பங்கள் 1670ல் மாந்தையிலிருந்து குடிபெயர்ந்து மாதாவின் சுரூபத்தைத் தூக்கிக்கொண்டு வன்னிக் காட்டில் அலைந்து திரிந்து இறுதியாக ஒரு பழைய குளத்தின் அருகில் அமைந்திருந்த மருதமடு என்னும் குக் கிராமத்தை வந்தடைந்தன.

அதே சமயத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து ஒல்லாந்தரின் கலாபனைக்குப் பயந்து 200 கத்தோலிக்கர்கள் பூநகரி வழியாக வெளியேறி, பின்பு அற்புதமாக மருதமடு வந்து சேர்ந்தனர். அவர்களுடன் வந்த போர்த்துக்கேய தளகர்த்தன் ஒருவனின் மகளான எலேனா என்னும் பக்தியுள்ள பெண்மணி மாதாவின் திருச்சுரூபத்தை வைப்பதற்கென சிறிய ஆலயமொன்றை அமைத்தாள். இலங்கையின் ஏனைய இடங்களில் கலாபனை கொழுந்துவிட்டு எரிந்தபோதும் இச் சிறிய குக்கிராமத்தின் அமைதியான சூழலில் கத்தோலிக்க விசுவாசம் வளர்ந்து வந்தது. அங்கு வாழ்ந்த மக்களுக்கு தேவதாய் தனது வரங்களை ஏராளமாகப் பொழிந்து வந்தாள். காட்டில் ஏராளமாக வாழும் நச்சுப் பாம்புகள் ஆலயச் சூழலில் ஒருவரையும் தீண்டுவதில்லை எனவும், வன விலங்குகள் தீங்கிழைப்பதில்லை எனவும் அக்காலத்திலிருந்து நம்பப்பட்டு வருகிறது. இப்பதியின் மண் குணப்படுத்தும் ஆற்றல் வாய்ந்தது என்று மக்கள் அதனை எடுத்துச் செல்வதும் வழக்க மாயிருக்கிறது.

## முதல் பரிபாலகர்கள்

1686ல் யோசவ்வாஸ் முனிவரும் மற்றும் கோவையைச் சேர்ந்த தியான சம்பிரதாயக் குருமாரும் இலங்கைக்கு வந்ததால் கத்தோலிக்க சமயம் மீண்டும் புத்துயிர் பெற்று வளரலாயிற்று. 1706ல் மாதோட்டப் பகுதிக்கு மருதமடு தலைமை மீசாமாக இருந்ததென்றும் அப்போது அதற்குப்பொறுப்பாக இருந்த பேதுரு பெராவோ என்ற பரிசுத்த குருவானவரால் ஆலயம் மீளமைக்கப்பட்டதென்றும் வரலாறு கூறுகிறது.

ஆங்கிலேயர் ஆட்சியில் மத. சுதந்திரம் நிலைநாட்டப்பட்டது. அக் காலத்தில் மன்னாரிலிருந்தும் அயலூர்களிலிருந்தும் மடுவுக்கு யாத்திரீகர்கள் வருவது வழக்கமாயிருந்தது. அதனால் ஆலயத்தில் இடவசதி இல்லாதிருந்ததைக் கண்ட மோய்ஸ் என்னும் போர்த்துக்கேயப் பெரியார் களிமண்ணால் கோயிலைப் பெருப்பித்துக் கட்டி பின்னால் குருக்கள் தங்குவதற்கான ஒரு சிறிய அறையையும் கட்டினார்

## அமல மரித் தியாகிகளின் கீழ் மடுப்பதி

யாழ் மறைமாவட்டத்தை அமல மரித் தியாகிகள் பொறுப்பேற்றபின் ஆயர் பொஞ்சின் இத்திருத்தலத்தின் திருநாளை ஆடி 2ம்திகதி கொண்டாட ஏற்பாடு செய்தார். 1872ல் மடுப்பதியைத் தரிசித்த ஆயர் அவ்வாலயம் அழிவுற்ற நிலையில் இருப்பது கண்டு கானகமத்தியில் ஒரு ஆலயத்தைக் கட்டியெழுப்ப திடசங்கற்பம் பூண்டார். நாம் இன்று காணும் ஆலயத்திற்கு அவ்வாண்டில் தானே அடிக்கல் நாட்டப்பட்டது. இந்த ஆலயத் திருப்பணி ஆயர் யூல்னுடைய காலத்தில் பூர்த்தியடைந்தது.

இதனைத் தொடர்ந்து கம்பீரமான கோயில் முகப்பு, விசாலமான குருமனை, நற்கருணைச் சிற்றாலயம், லூர்து அன்னையின் கெபி, போர்ட்டிக்கோ ஆகியவை காலப்போக்கில் உருவாக்கப்பட்டன. யாத்திரீகருக்கு குடி நீர் கிடைக்கும் பொருட்டு பல கிணறுகள் அமைக்கப்பட்டன. மடுக்குளமும் ஆழமாக்கப்பட்டது.

ஆயர் பொஞ்சினுக்குப்பின் பொறுப்பேற்ற ஆயர் புறோ அவர்கள் மடுத்திருப்பதியை ஒரு யாத்திரை தலமாக அங்கீகாரம் செய்தார். திருத்தந்தையின் அங்கீகாரத்தையும் பெற்றார். திருத்தந்தையின் பிரதிநிதியைக் கொண்டு மடு அன்னையின் திருச் சுரூபத்திற்கு முடி சூட்ட அவர் ஏற்பாடுகள் செய்த போதிலும், அதற்கிடையில் அவர் காலமாகி விட்டதால் அடுத்து வந்த ஆயரான கயோமர் ஆண்டகையின் காலத்தில்தான் அது நிறைவேறியது. அவ்வைபவத்தின்போது 1½ இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் அங்கு குழுமியிருந்தனர்.

ஆலயத்தின் அபிஷேகவிழா 1944ல் சிறப்பாக கொண்டாடப்பட்டது. அந்நாட்களில் 2ம் உலகப்போர் நடந்து கொண்டிருந்தமையால் பல வசதியீனங்கள் இருந்தபோதிலும் பெருந்தொகையான மக்கள் அதிற் பங்குபற்றினர்.

1948ம் ஆண்டு அமலமரித் தியாகிகள் இலங்கைக்கு வந்ததன் நூற்றாண்டு விழாவையொட்டி அன்னையின் திருச்சுரூபம் முதல்முறையாக மறை மாவட்டத்திலுள்ள எல்லாப் பங்குகளுக்கும், எல்லாமாக 80 ஆலயங்களுக்குக் கொண்டுசெல்லப்பட்டது. தாம் நாடிச் செல்லும் அன்னை இன்று தம்மை நாடிவந்து அருள்மழை பொழிந்ததை கத்தோலிக்கர், பிறமதத்தவர் அனைவரும் கண்குளிரக் கண்டு அன்னையை மகிழ்ச்சியோடு வரவேற்றனர்.

மடு அன்னைக்கு முடிசூட்டப்பட்டதன் வெள்ளிவிழாவும் 1949ல் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இலங்கையிலுள்ள எல்லா ஆயர்களும் ஒன்றரை இலட்சத்துக்கு மேற்பட்ட மக்களும் இவ்விழாவில் கலந்து கொண்டனர். 1974ல் மடு அன்னை முடி சூட்டப்பட்டதன் பொன்விழா நினைவாக அவளது திருச்சுரூபம் இரண்டாம் முறையாக மறைமாவட்டத்தின் எல்லாப் பங்குகளுக்கும் கொண்டு செல்லப்பட்டது.

## மன்னார் மறைமாவட்டத்தின் கீழ்

1981 புதிய மன்னார் மறை மாவட்டம் அமைக்கப்பட்டபோது மடுப் பதி மன்னார் ஆயரின் பரிபாலனத்தின் கீழ் வந்தது.

1983க்குப் பின் நாட்டின் நிலைமை சீர்கெட்டு நாட்டின் பிறபாகங்களில் வன்முறைகளும் இடம்பெயர்வுகளும் நிகழ்ந்தபோது அங்கிருந்து பலர் மடுப்பிரதேசத்தில் புகலிடம் தேடி வந்தமையால் அண்மைக்காலங்களில் மடுப் பிரதேசமே ஒரு அகதிமுகாமாக மாறியது. அத்துடன் நாட்டின் சீரற்ற நிலை காரணமாகவும், போக்குவரத்து வசதி யின்மை .காரணமாகவும் வெளி இடங்களிலிருந்து யாத்திரீகர் அங்கு வருவதும் தடைப்பட்டது.

இவ்வாண்டு ஏப்ரல் மாதத்தில் மடுப் பிரதேசம் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டதைத் தொடர்ந்து புதிய நிலை உருவாகியுள்ளது. இராணுவத்தினர் அங்கு முகாம்கள் அமைப்பதும், ஆயுதங்களுடன் நடமாடுவதும், ஆலயச் சுற்றாடலில் தடைசெய்யப்பட்டுள்ள மதுபாவனை, களியாட்டப் பொழுதுபோக்குகளில் ஈடுபடுவதும் திருத்தலத்தின் அமைதியையும், புனிதத்தன்மையையும் பாதிப்பதால் அங்கிருந்து படைகள் விலக்கப்பட வேண்டுமென மன்னார் ஆயர் மட்டுமல்ல, இலங்கையின் ஏனைய ஆயர்களும் கோரியுள்ளனர்.

## இறைவன் அளித்த அருட்கொடை

மடுத்திருப்பதியை ஒரு சாதாரண ஆலயமாக எவரும் கருதுவதில்லை. அப்பதியைத் தரிசித்த திருச்சபைப் பெரியார்கள் பலர் மடு அன்னை இறைவன் எமக்கு அருள் வழங்குவதற்காக விசேஷமாக ஏற்பாடு செய்த ஒரு கொடை எனக் கூறியுள்ளனர். அங்குவரும் பாவிகள் உளமாற்றம் பெற்று பாவசங்கீர்த்தனம் செய்து சமாதானமாகச் செல்லுகின்றனர். துன்புறுவோர் தமது குறைகள் நீங்கி ஆறுதல் பெறுகின்றனர் என்பதற்கு அவர்களால் செலுத்தப்படும் எண்ணற்ற நேர்த்திகளே சான்று.

விழாக் காலங்களில் இலங்கையின் எட்டுத்திக்கிலுமிருந்து பல்லாயிரம் மக்கள் அங்கு வருகின்றனர். விழா இல்லாத நேரத்திலும் மக்கள் கூட்டம் கூட்டமாக அங்கு யாத்திரை செய்து மடு அன்னையை தரிசித்துச் செல்கின்றனர். ஞான ஒடுக்கங்கள் செய்கின்றனர். இரவு பகலாக செப தவங்களில் ஈடுபடுகின்றனர். மக்கள் மடுப்பதியை எவ்வாறு கருதுகின்றனர் என்பது இதனால் விளங்குகிறது. பாரிய மரங்கள் சூழ்ந்த மடுப்பதியின் அமைதியும் ஏகாந்தமும் முனிவர்களின் தபோவனத்தைப் போல் ஆன்மீக சிந்தனைகளைத் தூண்டவும், உளத்தூய்மை பெறவும் உகந்த சூழ்நிலையைத் தருகின்றன. சுருங்கக்கூறின் மருதமடுப்பதி இலங்கை வாழ் கத்தோலிக்க மக்களின் இதயம் எனலாம்

# தேவ அழைத்தல்

### இறைவன் உன்னை அழைக்கின்றாரா?

ஒரு குருவானவராகவோ துறவற சகோதரனாகவோ வாழ உன்னை இறைவன் அழைக்கின்றாரா என தெரிந்து கொள்ள விரும்புகிறாயா?

புறாவையோ வானதூதனையோ உனக்கு இறைவன் தூது அனுப்புவார் என எண்ணாதே நீ ஏமாற்றம் அடையலாம். சாதாரணமாக உன் மனத்தில் உதிக்கும் வேறு நல்ல சிந்தனைகள் போன்றே இவ்வழைத்தலும் நல்ல எண்ணங்களாய் வரும். ஏன் நான் குருவாகக் கூடாது என்ற நல்ல எண்ணம் உன் மனத்தில் உதிக்கும்போது அந்த எண்ணத்தை இறைவன் தரும் அழைப்பாக எண்ணி குருத்துவம் அல்லது துறவறம் என்றால் என்ன என்று சிந்திக்க வேண்டும். உண்மையிலே இறைவன் அழைத்தால் அதற்கு வேண்டிய ஆன்மீக உதவிகளையும் வேறு உதவிகளையும் அவர் செய்வார் என்பது உறுதி. இவ்வழைப்பை ஏற்று ஒத்துழைத்து ஆண்டவரை பின் செல்வது உன் கையிலேதான் இருக்கின்றது. சாதாரணமாக ஒரு மனிதன் போதிய அறிவும் உடல்நலமும் உள்ளவனாக இருக்கின்றான். உன்னைத்தானே புனிதப்படுத்திக் கொள்ள சகோதரா, இப்போதே தயார் செய்துகொள்! குருமடத்திற்கு சென்றபின் செயற்படலாமென எண்ணாதே.

### மேற்றிராசனக் குருக்கள்:

இவர்கள் தமது பணியை ஒரு பங்குத் தளத்தில் ஆற்றுகின்றார்கள். இப்பணி யேசு அப்போஸ்தலர்களை அழைத்ததில் ஆரம்பமாகிவிட்டது. யேசு இறந்தபின் சீடர்கள் ஒவ்வொரு திசையிலும் சென்று பணியாற்றினர். இவர்களுக்கு உதவியாக ஆயர்களை நியமித்தார்.

காலப் போக்கில் சமுதாயத்தில் தேவைகள் அதிகரிக்க அதிகரிக்க தேவைக்கேற்ப ஆயர்கள் அனைத்து இடங்களிலும் பணிபுரிய முடியாமல் போனதால் ஆயரின் பிரதிநிதிகளாக குருக்கள் நியமிக்கப்பட்டனர் இதுதான் இன்றைய பங்குக்குரு. "நீர் என்னை அனுப்பியது போல் நானும் அவர்களை அனுப்புகிறேன்" என்று யேசு தந்தையை நோக்கி குருக்களுக்காக வேண்டுகின்றார். இவர்கள் ஒதுக்கப்பட்டு, நசுக்கப்பட்டு வாழும் மக்களுடன் மக்களாக இணைந்து பாரிய பொறுப்பை ஏற்று மக்களுக்காக பணிபுரிந்து வருகின்றார்கள். இவர்களின் முக்கிய பணியாவது போதகமாகும்.

இவர்களின் விருது வாக்கு: "உன் பணிக்கு நான் இதோ".

### அமலமரித் தியாகிகள்:

அன்று புரட்சியினால் புரண்டு கிடந்தது பிரான்சு தேசம். எமது திருச்சபை பாதிக்கப்பட்ட காலம். வேத கலாபனை வேகமாய் எங்கும் பரவியது. மக்கள் விசுவாசம் எங்கும் மங்கியது. குருக்கள் நாடு கடத்தப்பட்டார்கள். திருத்தலங்கள்

(தொடர்ச்சி 3ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள் முன்னேற்றத்திற்கான இரண்டு நாள் கருத்தரங்கு

யாழ் மனித முன்னேற்ற நடுநிலையத்தினரால் பெண்களுக்கு சேமிப்பை வளர்த்தல், சுழற்சிமுறை கடன் மூலம் பொருளாதாரத்தை முன்னேற்றல் என்னும் குறிக்கோளுடன் பிரதேச ரீதியாக ஏற்படுத்தப்பட்ட 'சகோதர பகிர்வாழ்வுச் சங்கங்கள்' அனைத்திற்குமான ஓர் ஒன்றுகூடல் கருத்தரங்கு கடந்த 27, 28 ஆகிய தினங்களில் புனித சின்னப்பர் விடுதியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

முகமாலை, கரவெட்டி, கொக்குவில் மேற்கு, கொய்யாத் தோட்டம், தெல்லிப்பளை கிழக்கு, மெலிஞ்சிமுனை, மயிலிட்டித்துறை, பொலிகண்டி கிழக்கு ஆகிய பிரதேசங்களில் உள்ள மேற்படி சகோதர பகிர்வாழ்வு சங்கத்தின் பிரதிநிதிகள் கலந்து பயனடைந்தனர்.

அருட்திரு ஜெயக்குமார் தலைமை தாங்கிய இக் கருத்தரங்கில், தற்கால சூழலில் தடைகள் ஊடாக பெண்கள் எவ்வாறு முன்னேறுவது என்னும் தலைப்பில் திருமதி சரோஜினி சிவச்சந்திரன் அவர்கள் உரையாற்றுகையில் பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் தடைகளை முறியடிக்க பெண்களே முயற்சியெடுப்பதுடன் எதிர்காலத்தை நன்கு திட்டமிட்டு செயற்படுபவர்களாகவும் இருக்க வேண்டும் எனத் தெரிவித்தார். பொருளாதார ரீதியில் குடும்பங்களை வளப்படுத்த பெண்கள் எவ்வாறு பங்களிப்புச் செய்யலாம் என்னும் தலைப்பில் கெயர் நிறுவனப் பிரதிநிதி திருமதி ஞானேஸ்வரன் உரையாற்றுகையில் தங்கள் தங்கள் சூழலுக்கேற்ற முறையில் சுயதொழிலைச் செய்ய தெரிந்திருக்க வேண்டியவர்களாக பெண்கள் இருக்கின்றார்கள் என்றார்.

சுழற்சிமுறைக் கடனும் முகாமைத்துவமும் என்னும் தலைப்பில் கெயர் நிறுவனப் பிரதிநிதி திரு அந்தோனிப்பிள்ளை உரையாற்றுகையில் சிக்கன வாழ்வு மூலம் குடும்பங்களை வளப்படுத்துபவர்களாக நீங்கள் இருக்க வேண்டும் என்றார். "இக்கருத்தரங்கின் ஊடாக நாங்கள் தொழில் முயற்சியில் ஈடுபடுவது பற்றியும் எமது குடும்பங்களை சிறந்த முறையில் எவ்வாறு கொண்டு நடத்துவது என்பது பற்றியும் அறிந்ததுடன் சகோதர சங்கங்களிடையே கூட்டுறவைப் பேணி எம் மத்தியில் அந்நியோன்னியத்தை ஏற்படுத்துவதற்கும் வழிவகுத்துள்ளது" என பயனடைந்தவர்கள் கூறினார்கள். (N-02)

# கட்டுரை ஓவியப் போட்டிகள்



உலக சிறுவர் தினத்தையொட்டி கிறிஸ்தவ தொழிலாளர் இயக்கம் பாடசாலை மட்டத்தில் கட்டுரை, ஓவியப் போட்டிகளை நடத்துகின்றது. இவற்றில், (ஆண்டு 6 முதல் ஆண்டு 13 வரை பாடசாலைச் சிறுவர் எவரும் பங்குபற்றலாம்)

### ஓவியப் போட்டி

கருப்பொருள் : "சிறுவர் உழைப்பை நிறுத்துங்கள்"
ஓவியத்தின் அளவு 18அங். x 14 அங்.
பென்சில், சோக் அல்லது நீர்வர்ணங்களை உபயோகிக்கலாம்
படத்தின் பின்புறத்தில் பங்குபற்றுபவர் பெயர், பாடசாலை வகுப்பு, சொந்த விலாசம், பாடசாலை அதிபரின் அத்தாட்சி ஆகியன தரப்பட்டிருக்க வேண்டும்.

### கட்டுரைப் போட்டி

கருப்பொருள் : "சிறுவர் உழைப்பு ஆரோக்கியமற்ற சமுதாயத்தின் அடையாளம்"
கட்டுரை 750 சொற்களுக்கு மேற்படாமல் ஒரே தாளில் எழுதப்பட வேண்டும்.
3 பிரதிகள் அனுப்பப்பட வேண்டும்.
பெயர், பாடசாலை, வகுப்பு, சொந்த விலாசம், பாடசாலை அதிபரின் அத்தாட்சி ஆகியன வேறொரு தாளில் தரப்பட்டு கட்டுரையுடன் இணைக்கப்பட வேண்டும்.
வெற்றி பெறுவோர் முறையே ரூ 1000/= ரூ 750/= ரூ 500/= ரொக்கப் பரிசு பெறுவர்.
முடிவு திகதி 10. 8. 99.

அனுப்பவேண்டிய விலாசம் :
உலக சிறுவர் தின ஓவிய, கட்டுரைப் போட்டி,
கிறிஸ்தவ தொழிலாளர் இயக்கம்,
4ம் மாடி,
6ம் சின்னப்பர் நிலையம்,
மல்வத்தை வீதி,
கொழும்பு - 11

## வெளிவந்துவிட்டது

### "அம்மா"

காவலன் கண்மணிகள் பகுதியில் வெளிவந்த அன்புவிழியின் மடல்கள் "அம்மா" என்ற பிரசுரமாக வெளிவந்துள்ளது. அன்னைமரி பற்றிய மடல்கள் மட்டுமே இத்தொகுதியில் அடங்கியுள்ளன. எளியநடையில் அமைந்துள்ள இந்த வெளியீடு சிறுவர் வாசனைக்கும், பரிசளிப்பதற்கும் ஏற்றதாகும்.

## இனிய இயற்கை .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இறுதியாக ஒவ்வொரு இளைஞரும் ஏனைய இளைஞரின் நன்மையான குணங்களை எழுத்தில் வடித்து பங்குத் தந்தையிடம் சமர்ப்பித்தனர். இப்பயிற்சி பிறரின் நற்பண்புகளை இனங்கண்டு கூடுதலாக அன்பு செய்யவும், மனம்விட்டுப் பழகவும், பங்கு வாழ்வில் ஒருவர் ஒருவருக்கு உறுதுணை புரியவும் ஏதுவான பயிற்சியாய் அமைந்தது.

*தகவல்: ச. வெண்மதி*
*நல்லூர் நிருபர்*

# தேவ அழைத்தல் . . .

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

அழிக்கப்பட்டன. பிரான்ஸ் நாட்டு விசுவாசம் உயிரிழந்து ஊசலாடியது. இவ்வேளையில் தான் இறைவன் இலட்சிய வீரனை அழைத்தார். அவர் தான் இயூஜின் டி மசெனட். அந்த துன்பவேளையில் தியாகமும் மனிதமாண்பும் வெளிப்பட்டது. அப்போது விசுவாசத்திற்கு உயிர் கொடுத்த உத்தம வீரனாகிய இவர் அமலமரித் தியாகிகள் என்னும் சபையை ஆரம்பித்தார்.

இவர்களின் விருது வாக்கு:
"எளியோர்க்கு நற்செய்தி அறிவித்தல்"
"திக்கெட்டும் சென்று நற்செய்தி அறிவித்தல்"
"செப்பியதை செப்பியபடி வாழல்"

**செபமாலைத் தாசர் சபை:**

இச்சபை ஒரு துறவறச் சபையாகும். 1928ம் ஆண்டு மாசித் திங்கள் 2ஆம் நாள் தோலகட்டி என்ற இடத்தில் அருள்திரு தோமஸ் அடிகளாரால் ஆரம்பமானது. இது ஒரு மறைந்த சபையாகும். உலகில் மனித மீட்பிற்குத் தேவையானது செபம் தவமாகும். இச்சபையினர் செப தவ வாழ்வால் திருச்சபைக்கு வளமூட்டுகின்றனர்.

எந்த வகையில் இறை அழைப்புக் கிடைக்கிறது என்பதை உணர்ந்து அதனை இவ்வழைத்தல் வாரத்தில் சிந்தித்துக்கொள்ள வேண்டி அழைக்கிறேன்.

· "எப்பணிக்கு இறைவன் அழைக்கின்றாரோ அப்பணியை மனமுவந்து ஆற்றிடுவீர்"

· "உங்களுக்கு தெரியுமா? தேவ அழைத்தல் ஒரு மாபெரும் கொடை"

*யோ. போல் றூபன்*
*புனித மாட்டீனார் குருமடம்.*

# புனித மாட்டீனார் . . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொழில்கள் உங்கள் முன் உள்ளன. அதே வேளை இறைவனும் தன் பணிக்கென உங்களை அழைக்கிறார். தமது மந்தையை மேய்க்க நல்ல குருக்களாக வர உங்களை அழைக்கிறார்.

27ம் திகதி மதியம் வரை உரைகளும், கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. அருட்திரு பயஸ் அடிகளார், அருட்திரு சாள்ஸ்கொலின்ஸ் அடிகளார், அருட்திரு கிருபாகரன் அடிகளார், அருட்திரு மைக்கல் சவுந்தரநாயகம் அடிகளார், அருட்திரு மவுலிஸ் அடிகளார், அருட்திரு ரவிச்சந்திரன் அடிகளார், ஆசிரியர் திரு அகஸ்ரின் ஆகியோர் அழைத்தல் பற்றிப் பல்வேறு கோணங்களின் ஊடாக விளக்கமளித்தார்.

குருவாக வரவிரும்பும் ஒருவன் நல்ல தேக ஆரோக்கியம் கொண்டவனாகவும், சுறுசுறுப்பானவனாகவும், பக்தி மிக்க குடும்பம் ஒன்றிலிருந்து வருபவனாகவும், இறைவிசுவாசம் உள்ளவனாகவும் இருக்க வேண்டும் என்பதையும், நற்குணங்கள் கொண்டிருக்க வேண்டும் என்பதையும் அவர்கள் குறிப்பிட்டனர்.

26 ஆம் திகதி குருமட மாணவர்களால் இரவுக் கலை நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

இப்பாசறையில் கலந்து கொண்ட மாணவர்கள் இப்பாசறை மூலம் தாம் மிகுந்த பயன் அடைந்துள்ளதாகவும், தியானம், குருமட நேர ஒழுங்குகள் தம்மைக் கவர்ந்துள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர். எதிர்காலத்தில் இறை பணிக்கெனத் தம்மை அர்ப்பணிப்போம் என அவர்கள் உறுதியுடன் சென்றதையும் அவதானிக்க முடிந்தது.

*தகவல்: S. R. ஜெயரட்ணம்*

# நித்திய வாழ்வு எய்திய 31வது நினைவஞ்சலி

அன்னை மடியில்
25 * 01 * 1935

ஆண்டவன் அடியில்
22 * 05 * 1999



அமரர். திருச்செல்வம்

தியாகத் தலைவர் எம் மீட்பர் கிறிஸ்து தந்த நற்செய்தி சாவுக்கு சாவு கொடுக்கும். அவர் தந்த நற்செய்திப் பாதையிலே எம்மிடையே எம்மில் ஒருவராக நீர் வாழ்ந்த வாழ்வு - உம் சாவுக்கு சாவு கொடுக்கும். நாம் எதிர்பாராத விதமாக உம்மைத் தேடி வந்த சாவு. கண்களெல்லாம் கடல் பெருக கனத்து நெஞ்சம் ஓலமிட மண்ணகத்தின் பாதைவிட்டு விண்ணகத்தில் வாழ்கின்றீரோ. எங்கள் பெருங்கோவில் இடிந்தழிந்த மாளிகையை எண்ணி அழுகின்றோம். எம் இதயங்கள் வேகின்றதே.

செபம்:- நிமலனே திருச்செல்வம் ஆன்மாவை நின் அமைதியும் ஒளியும் ஆட்கொள்வதாக. நின் புகழ்பாடி நின்னடி தொழுதே நித்திய இன்பம் துய்ப்பதாக. தினம் செபிக்கும் எம் செபத்தில் உம்மை நினைத்துருகும் எம் ஒளியால் நிச்சயம் அவர் ஆன்மா சாவை வென்றே தீரும். கிறிஸ்துவில் அமைதி காணும்.

இவரின் பிரிவால் துயருறும்
அன்பு மனைவி, மக்கள், மருமக்கள்,
சகோதரர்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்

இவரின் ஆன்ம சாந்திக்காக (21-06-99) திங்கட்கிழமை காலை 6-30 மணிக்கு அருள் ஆச்சிரமத்தில் இரங்கல் திருபலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

தகவல்:-மகள்; ஜெ. ஜெய...

# விண்ணக வாழ்வின் 29ம் ஆண்டு மலர்வு



மிரியம் சாமினி சில்வெஸ்டர்

அன்னையின் மடியில்
06-10-1962
ஆண்டவன் அரவணைப்பில்
26-06-1970

**ஆண்டுகள் இருபத்தொன்பதாகியும் நின் நினைவுகள் எம் நெஞ்சங்களை நனைக்கின்றன.**

பிரிவால் துயருறும்
பெற்றோர், சகோதரர்கள்,
உற்றார்

தகவல்...

# 45வது நாள் நினைவு அஞ்சலி

அன்னை மடியில்
24 * 12 * 1969

ஆண்டவன் அடியில்
15 * 05 * 1999



திரு. இராசரட்ணம் கிறிஸ்ரி குகராஜா

இறைவனே! எங்கள் இரக்கத்தின் தந்தையே! மரித்த இ.கிறிஸ்ரி குகராஜா என்பவர்மேல் இரக்கமாயிரும் "உமது இரக்கச் செயல்களை நினைவு கூர்ந்து" இவரின் பாவங்களை மன்னித்து இவரை உம் பேரின்ப இராட்சியத்தில் வைத்தருளுமென்று உம்மிடத்தில் வேண்டுகின்றோம்.

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக மிருசுவில் புனித நீக்கிலார் ஆலயத்தில் 28ம் திகதி காலை 6-15 மணிக்கும், வவுனியா புனித அந்தோனியார் ஆலயத்தில் 28ம் திகதி காலை 6-30 மணிக்கும் திருப்பலிகள் ஒப்புக் கொடுக்கப்பட்டன.

இல. 74, மன்னார் றோட்
வவுனியா.

இவரின் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒவ்வொரு கிறிஸ்தவனும் நடமாடும் வேதப்புத்தகம்

**~ பாசையூர் புனித அந்தோனியார் திருவிழாவில் யாழ் ஆயர்**

"எம்மைச் சூழவுள்ள இதர மக்கள் கிறிஸ்தவனைத்தான் வாசிப்பார்கள். எமது சீவியம் எப்படி இருக்கிறது நாம் எவ்வாறு பேசுகிறோம். எவ்விதம் பிறருடன் நடந்து கொள்கிறோம் என்பதைக் கூர்ந்து கவனித்து எம் வாழ்வை வாசிப்பார்கள். எனவேதான் நாம் ஒவ்வொருவரும் நடமாடும் வேதப்புத்தகம்'' என பாசையூர் புனித திருவிழாவில் கூட்டுத்திருப்பலி நிறைவேற்றி மறையுரையாற்றிய யாழ் ஆயர் பேரருட்திரு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் தெரிவித்தார்.

யாழ் குடாநாட்டின் பல பாகங்களிலிருந்தும் 13.6.99 ஞாயிறு காலை பதுவைப் புனிதரின் பதி நாடி வந்த பல்லாயிரக்கணக்கான பல சமயமக்களும் பக்தி பூர்வமாக கூடி நின்றனர். கூட்டுத் திருப்பலியை யாழ் ஆயருடன் மனித முன்னேற்ற நடு நிலைய இயக்குனர் அருட்திரு C.G ஜெயக்குமார் அடிகளாரும், திருப்பாலத்துவ சபை இயக்குனர் அருட்திரு றெஜி ராஜேஸ்வரன் அடிகளாரும் இணைந்து நிறைவேற்றினர்.

தொடர்ந்து ஆயர் ஆற்றிய மறையுரையில் "எமது புனிதர் பொதுமைப் புனிதர். பல்வேறு சமய மக்களும் இவரது வரத்தால் சகாயம் பெற்றுச் செல்கின்றனர். பதித மார்க்கங்களை சிதறடிக்கும் சம்மட்டியாக விளங்குகிறார். அந்த வல்லமைக்கு காரணம் என்ன? இவரது ஆன்ம பலமும், இறை வார்த்தையைத் தமது உணவாக மதித்து ஊட்டம் பெற்று அதன்படி தன் வாழ்வை வறியவர், ஒடுக்கப்பட்டோர், கைவிடப்பட்டோருடன் பகிர்ந்து பரிவிரக்கம் காட்டியதும், கிறிஸ்துவில் ஆழமான அன்பும், ஆத்துமவாஞ்சையும் கொண்ட மறைவல்லுனராக உத்தம சீடனாக விளங்கிமையும் தான்.

எமது சொல்லும், செயலும், வாழ்வும் இறை வார்த்தைப் புத்தகமாக மிளிரும் போதுதான் அந்த அழைத்தல் முழுமை பெறும். இறையன்பும், பிறரன்பும் கொண்டு பரிவுகாட்டி வாழ்வோம் '' என்றார்.

திருப்பலியைத் தொடர்ந்து புனிதரின் தேர்ப் பவனியும், திருச்சொரூப ஆசீரும் இடம்பெற்றது. இடம்பெயர்வின் பின் இம்முறை பெருமளவு மக்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. இத் திருவிழாவிற்கான சகல எற்பாடுகளையும் பங்குத்தந்தை அருட்தந்தை சாள்ஸ் கொலின்ஸ் அடிகள் திறம்பட மேற்கொண்டிருந்தார்.

மேலும் இப் பங்கைச் சேர்ந்த கலைஞர்களால் "கோடி அற்புதர்'' என்னும் ஒலிப்பதிவு நாடாவும் வெளியிடப்பட்டது. பாதுகாவலரின் வாழ்வையும், வரலாற்றையும் சித்தரிக்கும் 'கோடி அற்புதர்' என்னும் நவீன மயப்படுத்தப்பட்ட நாட்டுக் கூத்தும் காண்பிக்கப்பட்டது.

*தகவல் : எஸ். யேசுதாஸ் (கொழும்புத்துறை நிருபர்)*

## மனித உயிரின் மாண்பு மதிக்கப்படுவது இன்றியமையாதது

"ஆரோக்கியமுள்ள ஒரு சமுதாயத்திற்கு மனித உயிரின் மாண்பு மதிக்கப்படுவது இன்றியமையாதது. கல்வி நிலையங்கள் அகிம்சைக்கு குரல் கொடுக்க வேண்டும். இதை மாணவரின் மனதில் ஆழப்பதியச் செய்யவேண்டும்" இவ்வாறு யாழ் பரி. யோவான் கல்லூரியின் பரிசளிப்பு விழாவின் போது பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட யாழ் ஆயர் பேரருட்திரு தோமஸ் சவுந்தரநாயகம் கூறினார்.

"நாம் வாழ்ந்துகொண்டிருக்கும் இக்காலத்தில் வன்முறையும் சாவும் சாதாரண நிகழ்ச்சிகளாகி விட்டன. இவ்வன்முறைக் கலாசாரத்தில் ஆயுதங்களும் வன்செயல்களும் மேலோங்கி எல்லாப் பிரச்சினைகளுக்கும் அவையே தீர்வாகிவிட்டன. இந்த அளவுக்கு இதனைப் பேணி வளர்த்தது பல்வேறு கட்சி அரசியல்வாதிகளே. சட்டமும் அமைதியும் சீர்குலைந்து விட்டன. மக்களின் மனித உரிமைகள் நசுக்கப்படுகின்றன. உள்ளூராட்சி சபைகளுக்கு தேர்தல் நடத்தக்கூட முடியாதபடி முழுநாட்டையுமே வன்முறை தன்பிடிக்குள் வைத்திருக்கிறது. எமது நாட்டில் உலகின் நான்கு பெரிய மதங்கள் இருந்தும்கூட வ்ன்முறை என்னும் பூதத்தை எம்மால் சமாளிக்க முடியவில்லை" என்று அவர் மேலும் கூறினார். கிறிஸ்துவின் போதனையிலுள்ள அகிம்சையை அவர் எடுத்துக் காட்டி, இன்றைய வன்செயல்களின் மத்தியிலே மனித உயிருக்காக பரிந்து வினையாற்றும் இரு மாமனிதர்களைக் குறிப்பிட்டார். திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பரும், கல்கத்தா நகர் அன்னை திரேசாவுமே அவர்கள்.

"இத்தனை துன்ப துயர்கள் இருந்தபோதிலும், நாம் வன்முறைகளைக் கைவிட்டு, ஒருவரை ஒருவர் சகோதரர்களாக ஏற்று, ஒருவரையொருவர் நம்பத் தொடங்கினால், புதிய சகாப்தத்தில் நாம் பிரவேசிக்கும் பொழுது எமது நாகரிகம், ஆன்மீகம், விவேகம் ஆகிய வளங்கள் வெற்றி பெறுமென நம்புகிறோம்" என்று அவர் கூறினார்.

## கரவைப் பங்கு முற்றுகைக்குட்படுத்தப்பட்டது

"கடந்த ஒருமாதகாலமாக கரவைப்பங்கு சுற்றி வளைக்கப்பட்டு முற்றுகைக்குட்படுத்தப்பட்டது. இன்றுடன் அது முற்றுப் பெற்றுவிட்டது என்று எண்ண வேண்டாம். ஞானபோதகர்கள் விதைத்ததை அறுக்க எழுங்கள் எடுத்த தீர்மானங்களை இன்று முதல் நடைமுறைப்படுத்தி 2000ம் யூபிலி ஆண்டின் மகிழ்விலே அனைத்துலக கத்தோலிக்க மக்களுடன் கைகோர்த்து கடவுளை போற்றிப் புகழ்ந்து வாழ்த்தி வணங்க எம்மைத் தயார்செய்யும் முகமாக இன்றைய திருப்பலியில் இணைந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்."

இவ்வாறு கரவெட்டிப்பங்கின் மகா ஞானொடுக்கத்தின் முடிவு நாளன்று திருப்பலி ஒப்புக் கொடுத்த ஆயர் பேரருள்திரு தோமஸ் சவுந்தரநாயகம் அவர்கள் கூறினார்.

கரவைப் பங்கிலே 4.5.99 முதல் 30.5.99வரை யாழ் மறை மாவட்டக்குருக்கள் எழுவர் இணைந்து மக்கள் தம்மை அறியத் துணைபுரியும் கடினமான பணியை மேற்கொண்டனர்.

புனித அந்தோனியார் மரியன்னை ஆலயத்தினர் ஒரு பிரிவாகவும், அன்னை வேளாங்கன்னி, உலக இரட்சகர் ஆலயத்தினர் வேறொரு பிரிவாகவும் சகாய சகாய அன்னை செபஸ்தியார் ஆலயத்தினர் மற்றொரு பிரிவாகவும் வகுக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

அகவொளிக் குழுவினராலும் திருச்சிலுவைக் கன்னியராலும் உள உடல்நலக் கருத்தரங்குகளும் மறைக்கல்வி நிலையம் அமலமரித்தியாகிகள் திருவழிபாட்டுக் குழுவினர் அருட்கலாநிதிகள் மைக்கல் சவுந்தரநாயகம் பிலேந்திரன் ஆகியோரால் நடத்தப்பட்ட ஆன்மீகக் கருத்தரங்குகளும் சிறப்பம்சங்களாக இடம்பெற்றன.

21.5.99 முதல் 30.5.99 வரையுள்ள காலம் விசேட ஆராதனைக்கு ரியதாக அமைந்தபோதும் அதற்கு முன்னைய பத்து நாட்களும் இல்லத் தரிசிப்புக்கென ஒதுக்கப்பட்டு கரவைப் பங்கின் பன்னிரு வலயங்களும் திருப்பலிகளாலும் வழிபாடுகளாலும் நிரம்பி வழிந்தன. பங்கிலுள்ள பிரிவினைகளும் பிரச்சனைகளும் மகா ஞானொடுக்கத்தின் வெற்றிக்குச் சான்றாகும்.

இறைவார்த்தைப் பவனி திருச்செபமாலைப் பவனி போன்ற நிகழ்ச்சிகளுள் நற்கருணைப் பவனி மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பரலோக அன்னை ஆலயத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்ட பேரணியில் பல நூற்றுக் கணக்கான பக்தர்கள் பங்கு கொண்டனர். அலங்கரிக்கப்பட்ட வீதியூடாகச் சென்று மூன்று தரிப்பிடங்களில் அமைக்கப்பட்ட அலங்காரப் பந்தல்களில் நற்கருணை நாதர் சில நிமிடம் அமர்ந்திருந்து பக்தர்களுக்கு ஆசி வழங்கிய காட்சி அற்புதக் காட்சியாய் அமைந்தது. நாலரை மணிக்கு ஆரம்பமான பவனி ஏழரை மணிக்கு புனித அந்தோனியார் ஆலயத்தை அடைந்தது.

இறுதி நாளன்று மக்கள் வெள்ளத்தின் மத்தியில் ஆயருடன் பல அருள்தந்தையர்கள் கூட்டுச் சேர்ந்து ஒப்புக் கொடுத்த திருப்பலி நிகழ்வுகளின் சிகரமாய் அமைந்தது.

மகாஞானொடுக்க நினைவாக புனித அந்தோனியார் ஆலய முன்றலிலும் பரலோக அன்னை ஆலய முன்றலிலும் அமைக்கப்பட்ட திருச்சிலுவைகள் ஆயரால் ஆசீர்வதிக்கப்பட்டன.

*தகவல் : சி. வின்சன்ற்.*

## கிறிஸ்தவ விவகாரத்துக்கு ஒரு தனிப்பிரிவு

தற்போதுள்ள கலாசார சமய விவகார அமைச்சின் கீழ் கிறிஸ்தவ விவகாரத்துக்கான ஒரு பிரிவு அண்மையில் ஏற்படுத்தப்பட்டுள்ளமை நீண்ட காலத் தேவையொன்றைப் பூர்த்தி செய்துள்ளது.

கத்தோலிக்க திருச்சபையினதும் தேசிய சங்கத் திருச்சபைகளினதும் நலன்களைப் பாதுகாப்பதும் அரசிடமிருந்தும் பிற நிறுவனங்களிடமிருந்தும் கிறிஸ்தவர்கள் உதவிபெறத் துணைபுரிவதுமே இப்பிரிவின் நோக்கமாகும். நாட்டின் அரசியல் யாப்புக்கமைய இத்திணைக்களமானது கிறிஸ்தவ சமூகத்தின் நலன்களைப் பாதுகாக்கும்.

முன்னாள் பொதுநிதியின் பணிப்பாளர் நாயகமாக இருந்த திரு. ஹேர்மன் பெர்னான்டோ கத்தோலிக்க விவகாரத்தின் மேலதிக செயலாளராகவும், முன்னாள் மோட்டார் போக்குவரத்து ஆணையாளராக இருந்த திரு. டேமியன் பெரேரா அதன் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கிறிஸ்தவரது உரிமைகளைப் பாதுகாப்பதுடன், அவர்களது பாரம்பரியங்கள், மரபுகள், கலாசாரம், அரும்பொருட்கள் ஆகியவற்றைப் பேணுவதற்கும் இத்திணைக்களம் துணைபுரியும்.

## வன்னியில் வெரித்தாஸ் வானொலி தமிழ்ப்பணித் தொடர்பகம்

ஆசிய ஆயர் மன்றத்தினால் நடாத்தப்பட்டு "உண்மை ஓங்குக" என்ற விருதுவாக்குடன் ஆசிய மொழிகள் பலவற்றில் தனது ஒளிபரப்பு சேவையை ஆற்றி வரும் வெரித்தாஸ் வானொலி தமிழிலும் பல ஆண்டுகளாக அரும்பணியாற்றி வருகின்றது. வெரித்தாஸ் வானொலி தமிழ்ப் பணி வன்னியிலும் இவ்வாண்டு முதல் தனது சேவையை ஆற்றிவருகிறது.

வன்னியில் ஓர் தொடர்பகம் அமைக்கப்பட்டு வைகாசி மாதம் 23ம் திகதி பி.ப. 4.30 மணிக்கு மல்லாவி புனித செபஸ்தியார் ஆலய வளாகத்தில் திறந்து வைக்கப்பட்டது. முல்லைத்தீவு மாவட்ட நிர்வாக அதிகாரி திருவாளர் இ. கிருஷ்ணப்பிள்ளை அவர்கள் தொடர்பகக் கட்டடத்தைத் திறந்து வைத்தார். முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் திருவாளர் த. குருகுலராஜா, வெரித்தாஸ் வானொலி தமிழ்ப்பணி வன்னித் தொடர்பக பெயர்ப்பலகையைத் திரை நீக்கம் செய்துவைத்தார்.

அருட்பணியாளர் றெக்ஸ் சவுந்தரா அவர்கள் திறப்புவிழா வழிபாட்டை முன்னின்று நடத்தி கட்டடத்தை மந்திரித்தார்.

பெருந்தொகையான மக்கள் இத்திறப்பு விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நன்றி: விருட்சம்

## வெரித்தாஸ் வானொலி பற்றிய செய்திக்கு மறுப்பு

வெரித்தாஸ் வானொலியுடன் புலிகளின் குரல் இணைப்பு என அண்மையில் சில பத்திரிகைகளில் வெளிவந்த செய்தியை ஆசிய வெரித்தாஸ் வானொலியின் தலைவரான கருதினால் ஜைமி சின் திட்டவட்டமாக மறுத்துள்ளார்.

ஐலண்ட் திவயின பத்திரிகைகளின் முகாமையாளருக்கு எழுதிய கடிதத்தில் 1999 மே 31ம் திகதி தாங்கள் வெளியிட்ட 'புலிகளின் குரல் வெரித்தாஸ் வானொலியுடன் இணைகிறது.' என்ற செய்தி உண்மையற்றது. மேலும் அது தவறானதும் பொறுப்பற்றதுமாகும். இச் செய்தியை நீங்கள் தமிழ்நெற் செய்தியிலிருந்து பெற்றிருக்க வேண்டும் என்று கருதுகின்றோம். ஆனால் புலிகளின் குரல் சர்வதேசப் பிரதிநிதி அத்தகைய அறிக்கையொன்றும் தம்மால் வெளியிடப்படவில்லை என எமக்கு எழுதியுள்ளார்.

வெரித்தாஸ் வானொலி ஒரு சர்வதேச தனியார் வானொலி நிலையமாகும். அது வேறெந்த வானொலி நிலையத்தோடும் இணைய முடியாது. அத்துடன் மணிலாவுக்கு வெளியே அதற்கு எந்தவித நிலையமோ அலுவலகமோ இல்லை. மல்லாவியில் எமக்கு அலுவலகமோ ஊழியரோ இல்லை. என அவர் கூறியுள்ளார்.

இச்செய்தியை வெளியிட்டமை பற்றி தமிழ் நெற்றுக்கும் அருட்தந்தை கஸ்பார் ஜெகத்தினால் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கோப்பாய் புனித மரியன்னை ஆலயப் பெருவிழா

கோப்பாயில் அமைந்துள்ள புனித மரியன்னை ஆலயத்தின் பெருவிழா 31.5.99 அன்று சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அருள்திரு பிரான்சிஸ் டானியேல் அ.ம.தி. அடிகளார் கொடியேற்றி நவநாளை ஆரம்பித்து வைத்தார். நவநாள் தியானங்கள் பல குருக்களினால் வழங்கப்பட்டன. நற்கருணை விழாவாகிய 30ம் திகதி 15 சிறுவர்களுக்கு முதல் நன்மை வழங்கப்பட்டது.

T. சதாநந்தினி (மறையாசிரியர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம், பிரதானவீதி 360 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் ஒவ்செற் முறையில் 1999ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது P 197